[1993 ஏப்ரல் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 527, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

527—

மல்லசமுத்திரம், காளிப்பட்டி ஆதிதிராவிடர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

*11271—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மல்லசமுத்திரம், காளிப்பட்டி ஆதிதிராவிடர் தொழிலியல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் நலிவுற்ற நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அச்சங்கத்திற்கு உதவ அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மல்லசமுத்திரம் ஆதிதிராவிடர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் அவ்வப்போது விவசாயத்திற்குச் சென்றுவிடுகின்ற காரணத்தினாலே அது தொடர்ந்து லாபத்தில் இயங்க முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் விரும்புவார்களேயானால், அதிலே இருக்கின்ற தறிகள் அனைத்திற்குமே, அவர்களுடைய முயற்சியால் அனைவரும் தொடர்ந்து வேலைக்கு வர ஆரம்பித்தால் லாபத்தை ஈட்டமுடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக 10 அம்சத் திட்டங்களைத் தீட்டி, ஆதிதிராவிடர்கள் மக்களையும் அர்ச்சகர்களாக்கி, துவண்டு கொண்ட சமுதாயத்தை தொழில் அதிபர்களாக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் மல்லசமுத்திரம் ஒன்றியத்திலுள்ள ஆதிதிராவிடர் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள அந்த கைத்தறி நெசவாளர் சொசைட்டியில் பணிபுரியும் சங்க உறுப்பினர்களை மீண்டும் அந்தத் தொழிலில் ஈடுபடுத்த சங்க உறுப்பினர்களை ஊக்குவிக்க இந்தத் துறையில் ஏதேனும் சிறப்பு நடவடிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவுத் தொழிலைவிட அவர்களுக்கு விவசாயத்தின் மேல் மிக ஆவலாகவும் அக்கறையோடும் இருக்

1993 ஏப்ரல் 29]

கின்ற காரணத்தினால் அங்கே இருக்கின்ற மொத்தத் தறிகள் 100, அதிலே பத்தே பத்து தறிகளில் உள்ளவர்கள் மட்டுமே அங்கே பணியாற்றுவதற்காக வருகிறார்கள். மற்றவர்கள் தொழிலுக்கு தொடர்ந்து வருவதில்லை. ஆதலால்தான் நஷ்டத்திற்குக் காரணம். கைத்தறி துறையின் சார்பில் அனைத்து சலுகைகளும் செய்யப்படுகின்றன. அவ்வப்போது அவர்களுக்காக செய்யப்படுகிறது அனைத்து சலுகைகளும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சித்து, அவர்களுடைய முயற்சியால் இந்த அரசு அறிவித்திருக்கிற சிறப்பானத் திட்டங்களை எடுத்துரைத்து அவர்கள் தொடர்ந்து பணியாற்றுவதற்கு, அந்த 90 பேர்கள் வருவதற்கு, இவர்கள் முயற்சித்தால் முடியாதது ஒன்றும் இல்லை. அந்த 90 உறுப்பினர்களைச் சந்தித்து அவர்களுக்கு விளக்கத்தை தந்து அவர்கள் தொடர்ந்து பணிக்கு வருவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வார்களானால் அவர்கள் ஓய்வுபெறுகின்றபோது அவர்களுக்கு பென்சன் திட்டம் இருக்கிறது, மற்ற திட்டங்கள் இருக்கின்றன. இன்சுரன்ஸ் திட்டம் இருக்கிறது. எல்லா சலுகைகளும் இருக்கின்றன. அவர்களுக்கு அவை கிடைக்கும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே முயற்சித்து அவர்கள் தொடர்ந்து பணிக்கு வருவதற்குரிய வாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 528, திரு. எம். கே. பாலன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

528—

ஈக்காட்டுத்தாங்கல் நேரு சாலையிலுள்ள பாலத்தை மேம்பாலமாக விரிவுபடுத்தல்.

* 9545—திரு. எம். கே. பாலன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, ஈக்காட்டுத்தாங்கல் நேரு சாலையில் உள்ள பாலத்தை மேம்பாலமாக விரிவுப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,